# நன்மையால் தீமையை வெல்லுதல்



**மனன வசனம்**

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ரோமர் 12:2.**

**ஆராய்ச்சிக்கு**

**ரோமர் 12; ரோமர் 13.**

டிசம்பர் 16 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

நியாயப்பிரமாணம்பற்றி ரோமர்களிடம் காணப்பட்ட தவறான எண்ணங்களைப் போக்க பவுல் மிகவும் பிரயாசப்படுகிறார்; அதேநேரம், கிறிஸ்தவர்களிடம் மெய்யான கீழ்ப்படிதல் காணப்படவேண்டும் என்றும் கூறுகிறார். இருதயத்திலும் மனதிலும் மெய்யாக உண்டாகும் உள்ளான மாற்றத்தால் இந்தக் கீழ்ப்படிதல் உருவாகிறது; தேவனிடம் தன்னை அர்ப்பணித்துள்ள ஒருவரில் தேவ வல்லமை கிரியைசெய்வதால் மட்டுமே இந்த மாற்றம் உருவாகிறது.

இந்தக் கீழ்ப்படிதல் தானாக உருவாகிற ஒன்றல்ல; அப்படி ரோமர் சொல்லவுமில்லை. கீழ்ப்படிதலுக்கான நிபந்தனைகளைகிறிஸ்தவர்கள் அறிந்திருக்கவேண்டும்; அந்த நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய அவர்கள் விரும்பவேண்டும்; அந்தக் கீழ்ப்படிதலைச் சாத்தியமாக்குகிற வல்லமையை அவர்கள் நாடவேண்டும்.

கிறிஸ்தவ விசுவாசத்தில் கிரியைகளுக்கும் பங்கிருப்பது இதிலிருந்து தெரிகிறது. பவுல் எங்குமே கிரியைகளைக் குறைகூறவில்லை; 13-15 அதிகாரங்களில் கிரியைகளை வலியுறுத்திப் பேசுகிறார். விசுவாசத்தால் மட்டுமே நீதி கிடைப்பதாக முன்பு அவர் சொன்னதற்கு இது எவ்விதத்திலும் முரணானது கிடையாது. மாறாக, விசுவாசத்தால் வாழ்வதின் மெய்யான வெளிப்பாடுதான் கிரியைகள். இயேசு வந்தபிறகு நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிக வெளிப்பாடுகளால், பழைய ஏற்பாட்டு நிபந்தனைகளைவிட புதிய ஏற்பாட்டு நிபந்தனைகள் கடினமாக இருக்கின்றன என்றுகூட சிலர் சொல்லலாம். புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு முன்மாதிரி இயேசுவே. ஒழுக்கமான நடத்தையின் மாதிரியாகக் கொடுக்கப்பட்டுள்ளார். நாம் பின்பற்றவேண்டிய மாதிரி அவர் மட்டுமே. ‘‘(மோசே, தானியேல், தாவீது, சாலொமோன், ஏனோக்கு, தெபொராள் போன்றோரின் சிந்தை அல்ல) கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது.’’ பிலி 2:5.

2017, டிசம்பர் 23 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

ரோமரில் கோட்பாடுகள் குறித்த ஆலோசனைகள் 11ஆம் அதிகாரத்துடன் முடிவடைகின்றன; 12-16ஆம் அதிகாரங்களில் நடைமுறை ஆலோசனைகளும் தனிப்பட்ட குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. விசுவாச வாழ்க்கையை வாழ வேண்டியவிதம்பற்றிக் கூறும் இக்கடைசி அதிகாரங்கள் மிக முக்கியமானவை.

விசுவாசம் என்பது கீழ்ப்படிதலின் இடத்தை நிரப்பக்கூடியதல்ல; விசுவாசமானது, நாம் ஆண்டவருக்குக் கீழ்ப்படியவேண்டிய கடமையைப் போக்குவதும் அல்ல. ஒழுக்கநியதிகள் ஒழிந்துபோகவில்லை; புதிய ஏற்பாட்டில் இந்த நியதிகள் விளக்கமாகவும் விரிவாகவும் சொல்லப்படுகின்றன. இந்த ஒழுக்கநியதிகளின்படி கிறிஸ்தவர்கள் வாழ்வது எளிதல்ல. மாறாக, சுயத்திற்கும் பாவத்திற்கும் எதிரான போராட்டம் கடினமானது; எனவே, ஒழுக்கநியதிகளின்படி வாழ்வது சிலசமயங்களில் சிக்கலாக இருக்கலாம். தெய்வீக வல்லமை கிறிஸ்தவர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது; வெற்றி சாத்தியமென்கிற நிச்சயமும் கொடுக்கப்பட்டுள்ளது; 1பேதுரு 4:1,2. ஆனால் நாம் இருப்பது சத்துருவின் பிரதேசத்தில்; பாவச் சோதனைக்கு எதிரான அநேக போராட்டங்களை நாம் எதிர்கொண்டாகவேண்டும். நாம் விழுந்தாலும் தடுமாறினாலும் நமக்காகப் பரிந்துபேசுகிற ஒரு பிரதான ஆசாரியன் இருக்கிறார்; அதுதான் நற்செய்தியே. எபி 7:25.

***ரோமர் 12:1இல் நாம் வாழவேண்டியவிதத்தையும் பலிகளையும் பவுல் ஒப்பிட்டுப் பேசுவது எவ்வாறு பொருந்துகிறது? இந்த வசனத்தோடு ரோமர் 12:2 எவ்வாறு பொருந்துகிறது?***

ரோமர் 12:1இல் பழைய ஏற்பாட்டுப் பலிகளை பவுல் ஒப்புமையாகக் காட்டுகிறார். முன்பு மிருகங்களைப் பலியிட்டதுபோல, இப்போது கிறிஸ்தவர்கள் தங்கள் சரீரங்களை தேவனுக்குக் கொடுக்கவேண்டும். உயிர்ப்பலியாக அல்ல, அவர் சேவைக்காக தங்களை அர்ப்பணிக்கும் ஜீவபலிகளாகக் கொடுக்கவேண்டும்.

முற்காலத்தில், பலிக்கானவற்றை மிகவும் கவனமாகத் தேர்தெடுத்தார்கள். பலிமிருகத்தில் ஏதாவது குறையிருந்தால், அது நிராகரிக்கப்பட்டது; ஏனெனில் பலிக்கானது பழுதற்றிருக்கும்படி தேவன் கட்டளையிட்டிருந்தார். அதனால்தான் கிறிஸ்தவர்கள் தங்கள் ‘சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று’ கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் திறன்களை எல்லாம் சகல காவலோடும் காத்தால்மட்டுமே இது சாத்தியமாகும். நம்மில் யாருமே குறையில்லாதவர்கள் இல்லை; ஆனால், நம்மால் முடிந்தமட்டும் பழுதற்றவர்களாக, உண்மையுள்ளவர்களாக வாழப் பிரயாசப்படவேண்டும்.

‘உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ரோமர் 12:2. ஏற்கனவே கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு அப்போஸ்தலர் கூறுவதால், (கிறிஸ்தவ) வளர்ச்சியை அவர் குறிப்பிடுகிறார். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது அப்படியே தேங்கிநிற்பது அல்ல; நன்மையானதிலிருந்து மிகவும் நன்மையானதிற்கு முன்னேறிச் செல்வதாகும்.’ – மார்டின் லூதர். கிறிஸ்தவ வாழ்க்கையில் நன்மையானதிலிருந்து மிகவும் நன்மையானதிற்கு முன்னேறிச் செல்வது என்றால் என்ன?

தேவனுடைய ஒழுக்கப்பிரமாணம் மாறாதது; பத்துக்கற்பனைகள் ஒழிந்து விட்டதாகவோ, விசுவாசத்தால் அது அவமாக்கப்பட்டதாகவோ ரோமர் புத்தகத்தின் எந்த இடத்திலும் பவுல் சொல்லவில்லை. இந்தக் காலாண்டு முழுவதிலும் இதையே நாம் வலியுறுத்திவருகிறோம்.

நியாயப்பிரமாணத்தை ஆவியின்படி கைக்கொள்ளாமல் எழுத்தின்படி கைக்கொள்வதற்கு அதிக வாய்ப்பிருக்கிறது. ஆவியின்படி கைக்கொள்வது என்றால் அன்பால் கைக்கொள்வதாகும்; அதாவது தேவன்மேலும், மனிதர்மேலும் உள்ள அன்பால் கைக்கொள்வதாகும். தான் அன்பாக இருப்பதாக யார் வேண்டுமானாலும் சொல்லலாம்; ஆனால், அனுதின வாழ்க்கையில் அந்த அன்பை வெளிப்படுத்துவதே முக்கியமானது.

***நாம் ஒருவரிலொருவர் எவ்வாறு அன்பை வெளிப்படுத்தவேண்டும்? ரோமர் 12:3-21.***

1கொரி 12,13 போல ரோமரிலும், ஆவியின் வரங்களைப்பற்றிச் சொல்லிவிட்டு, அன்பை உயர்த்திக்கூறுகிறார் பவுல். அகாபே அன்புதான் உயர்தரமானது. 'தேவன் அன்பாகவே இருக்கிறார்.' 1யோவான் 4:8. எனவே, அன்பு என்பது தேவனுடைய குணத்தின் பிரதிபலிப்பாகும். ஒருவரை தேவன் அணுகுவதுபோல அணுகி, தேவன் அவரை நடத்துவதுபோல நடத்துவதே அன்புகூருவதாகும்.

அந்த அன்பை நடைமுறையில் காட்டும்விதம்பற்றி பவுல் கூறுகிறார். இதில் முக்கியமானது தாழ்மை; 'தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல்' இருக்கத் தெரிந்திருப்பதும் (ரோமர் 12:3), 'கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ள' ஆயத்தமாயிருப்பதும் (ரோமர் 12:10), தங்களை 'புத்திமான்களென்று எண்ணாதிருக்கத்' தெரிந்திருப்பதுமே (ரோமர் 12:6) தாழ்மை. 'நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்' என்று இயேசு தாமே கூறினார். மத் 11:29; இதன் அர்த்தம்பற்றித் தியானியுங்கள்.

கிறிஸ்தவர்கள்தாம் மற்ற எல்லாரையும்விட தாழ்மையானவர்களாக இருக்கவேண்டும். நாம் திக்கற்றவர்கள்; விழுந்துபோனவர்கள்; நாம் உதவிக்காக நமக்கு வெளியே சார்ந்திருக்கவேண்டியவர்கள். இரட்சிப்புக்குத் தேவையான நீதிக்கும், நம்மால் நாமே செய்யமுடியாத மாற்றத்தை நம்மில் உண்டாக்குகிற வல்லமைக்கும் நாம் தேவனையே சார்ந்திருக்கவேண்டும். நாம் எதைக் குறித்தாவது அலட்டவோ, பெருமைபாராட்டவோ தகுதியானவர்களா? நாம் பெருமைபாராட்டுமளவுக்கு நமக்குள் நாம் எதையாவது காட்டமுடியுமா? ஒன்றையும் காட்டமுடியாது. இதை உணர்ந்தாலே நம்மில் தாழ்மை உருவாக ஆரம்பித்துவிடும்; பவுல் நமக்கு அறிவுறுத்துவதுபோல, தேவனுக்குமுன்பாக மட்டுமல்ல, மற்றவர்களுக்கு முன்பாகவும் நாம் வாழவேண்டும்.

ரோமர் 12:18 சொல்லும் அறிவுரையை எவ்வளவு தூரம் உங்கள் வாழ்க்கையில் அப்பியாசிக்கிறீர்கள்? தேவ வார்த்தை சொல்கிறபடிச் செய்வதற்கு உங்கள் வாழ்வில் நீங்கள் ஏதாவது மாற்றங்களைச் செய்யவேண்டியுள்ளதா?

## கிறிஸ்தவனும் அரசாங்கமும்

***நாட்டின் அரசாங்க அதிகாரிகளிடம் நாம் எவ்வாறு நடக்கவேண்டும் என்பது குறித்த என்ன அடிப் படை நியதிகள் ரோமர் 13:1-7 வசனங்களில் காணப்படுகின்றன?***

---

அஞ்ஞான சாம்ராஜ்யம் ஒன்று உலகத்தை அரசாண்ட சமயத்தில் பவுல் இந்த வார்த்தைகளை எழுதுகிறார். அவர்கள் கொடூரர்களாக, அடிமட்டத்தில் சீர்கெட்ட வர்களாக இருந்தவர்கள்; மெய்யான தேவனை அறியாதவர்கள்; அந்தத் தேவனை ஆராதிக்க விரும்பினவர்களுக்கு எதிராகப் பெரிய அளவில் உபத்திரவத்தை ஒரு சில வருடங்களிலேயே துவங்கயிருந்தவர்கள். அதே அரசாங்கம்தான் பவுலைக் கொலைசெய்யவும் இருந்தது! ஆனாலும், கிறிஸ்தவர்கள் நல்ல குடிமக்களாக இருக்குமாறு பவுல் வற்புறுத்துகிறார். மோசமான அரசாங்கமாகஇருந்தாலும்கூட!

ஏனென்றால், அரசாங்க அமைப்பை வேதாகமும் ஆதரித்தே பேசுகிறது. அரசாங்கம் என்பது தேவன் நியமித்த ஓர் அமைப்பு ஆகும். சட்டத்திட்டங்களும், ஒழுக்கவிதிகளும் உள்ள ஒரு சமுதாயத்தில் மனிதர்கள் வாழவேண்டியது அவ சியம். சட்டமற்ற நிலையை வேதாகமம் ஆதரிக்கவில்லை.

அதற்காக, எல்லாவகை அரசாங்கங்களையும், அரசாட்சி முறைகளையும் தேவன் ஆதரிக்கிறார் என்று அர்த்தமல்ல. அப்படி அவர் ஆதரிப்பதில்லை. கொடுங்கோலர்கள் இருந்திருக்கிறார்கள். வரலாற்றிலும், இன்றைய ஆட்சிகளி லும் இதைக் காணலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும்கூட, கிறிஸ்தவர்கள் தங்களால் இயன்றமட்டும் தேசத்தின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்துநடக்கவேண டும். தேசத்தின் சட்டங்கள் தேவனுடைய சட்டங்களுக்கு முரணாக இல்லாத வரை யிலும் கிறிஸ்தவர்கள் தங்கள் தேசத்தலைவர்களை உண்மையோடு ஆதரிக்கவேண டும். அரசாங்கத்திற்கு எதிராகச் செயல்படவேண்டிய சூழ்நிலை உருவானால், அதற்குமுன் ஜெபத்தோடும் கவனத்தோடும் அதுபற்றி யோசிக்கவேண்டும்; மற்றவர்களி டம் ஆலோசனை கேட்கவேண்டும். உலகத்தை ஆட்டிப்படைக்கும் அரசியல் வல்லமைகள் தேவனுடைய உண்மைப் பிள்ளைகளுக்கு எதிராகச் செயல்படும் நாள் வரப்போவதை தீர்க்கதரிசனம் முன்னுரைத்துள்ளது. வெளி 13. அதுவரையிலும், நாம் எந்த நாட்டில் வாழ்கிறவராக இருந்தாலும், தேவனுக்குமுன் நல்ல குடிமக்களாக நாம் செய்யவேண்டியதை எல்லாம் செய்யவேண்டும்.

"அரசாங்கம் தேவன் நியமித்த ஓர் ஏற்பாடு என்பதை உணர்ந்து, அதன் சட்ட வரைமுறைகளுக்குட்பட்டு, அதற்குக் கீழ்ப்படிவது பரிசுத்த கடமை என்று போதிக்க வேண்டும். ஆனால், அதன் சட்டங்கள் தேவனுடைய சட்டங்களுக்கு புறம்பாக இருந்தால் மனிதர்களைவிட தேவனுக்கே கீழ்ப்படியவேண்டும். மனிதர்களின் சட்டங்களுக்கு மேலாக தேவ வார்த்தையைக் கருதவேண்டும்.

"அதிகாரிகளுக்கு நாம் எதிர்த்து நிற்கவேண்டிய அவசியமில்லை. சட்ட ஒழுங்கிற்கு கெடுதல் விளைவிக்கும்விதத்தில் செயல்படுகிறவர்கள் என்று நம் மேல் வழக்கு உண்டாகாமல் இருப்பதற்கு, நாம் பேசுகிற அல்லது எழுதுகிற வார்த் தைகளில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். நம்முடைய வழியில் தேவையற்ற தடைகளைக் கொண்டுவருகிற எதையும் நாம் பேசவோ செய்யவோ கூடாது." – *EGW, AA, p 69.*

*'ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்.' ரோமர் 13:8.*

***இந்த வசனம் சொல்வது என்ன? அன்பு இருந்தால் போதும், தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிகிற கடமை தானாக ஒழிந்துவிடும் என்று சொல்கிறதா?***

கற்பனைகளின் நியதிகளை மலைப்பிரசங்கத்தில் இயேசு விளக்கிக்கூறியது போல, பவுலும் இங்கு விளக்கிக்கூறுகிறார். நாம் செய்கிற ஒவ்வொன்றிற்கும் அன்பே அடிப்படையாக இருக்கவேண்டும். தேவனுடைய குணத்தின் மறுபதிப்பு நியாயப்பிரமாணம்; தேவன் அன்புள்ளவர்; எனவே, அன்புகூருவது நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதாகும். நியாயப்பிரமாணத்தின் நியதிகள் விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன; தரமற்ற எத்தகைய அன்பும் அதற்கு ஈடாகாது. பாவம் இன்னதென்று ஒழுக்கப்பிரமாணம்தான் காட்டுகிறது; எனவே, ஒழுக்கப்பிரமாணம் இன்றும் ஒழியவில்லை. பாவம் இப்போது ஒழிந்துபோனதாக யாரா லும் சொல்லமுடியுமா? அன்பின் அடிப்படையில்தான் கற்பனைகளை உண்மையாகக் கைக்கொள்ளமுடியும். கிறிஸ்துவை சிலுவையிலறைய இழுத்துவந்தவர்களில் சிலர், நியாயப்பிரமாணத்தை மீறாமல் இருக்க தங்கள்வீடுகளுக்கு விரைந்தார்கள்.

***கற்பனைகளைக் கைக்கொள்வதின் அடிப்படை அன்பு என்பதற்கு எந்தெந்த கற்பனைகளை பவுல் உதாரணங்களாகக் கூறுகிறார்? இவற்றை குறிப்பாகச் சொல்ல காரணம் என்ன? ரோமர் 13:9,10.***

அன்பு என்கிற நியதிபற்றி அங்கு அவர் புதிதாகச் சொல்லவில்லை. அது பழைய ஏற்பாட்டு முறைமையின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக இருந்ததை, 'உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக' என்கிற வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றன. நற்செய்தியைப் போதிக்க பழைய ஏற்பாட்டின் உதவியை பவுல் நாடுவதை இங்கும் காணமுடிகிறது. பவுல் இங்கு குறிப்பிடும் கற்பனைகள்மட்டுமே இன்றும் இருப்பதாக இதை வைத்து சிலர் வாதிடுகிறார்கள். அப்படியானால், கிறிஸ்தவர்கள் தங்கள் பெற்றோரை கனம் பண்ணாமல் இருக்கலாம், விக்கிரகங்களை வணங்கலாம், ஆண்டவருக்குப் பதிலாக வேறு தேவர்களை வணங்கலாம் என்று அர்த்தமா? இல்லை.

ஒருவரிடம் ஒருவர் நடந்துகொள்ள வேண்டியவிதம்பற்றி பவுல் சொல்கிறார். தனிப்பட்ட உறவுகள் குறித்துப் பேசுவதால், அதோடு சம்பந்தப்பட்ட கற்பனைகளைச் சுட்டிக்காட்டுகிறார். மற்ற கற்பனைகள் ஒழிந்துபோனதாக இதை வைத்து எப்படிச் சொல்லமுடியும்? அப் 15:20; 1தெச 1:9; 1யோவான் 5:21. பிறரை நேசிப்பதன்மூலம் தேவனை நேசிப்பதைக் காட்டுகிறோம். மத் 25:40; 1யோவான் 4:20,21.

தேவனோடு நீங்கள் வைத்துள்ள உறவானது, எவ்வாறு மற்றவர்களோடு நீங்கள் வைத்துள்ள உறவுகளில் வெளிப்படுகிறது? அதில் அன்பு எவ்வளவு பெரிய காரணியாக இருக்கிறது? தேவன் நம்மை நேசிப்பதுபோல, நாம் எவ்வாறு மற்றவர்களை நேசிக்கலாம்? அவ்வாறு நேசிப்பதற்குத் தடையாக இருப்பது என்ன?

## இரட்சிப்பு சமீபமாயிருக்கிறது

*'நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்கவேண்டும்; நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது.' ரோமர் 13:11.*

பவுல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு இந்த நிருபத்தை ரோமருக்கு எழுதினாரெனப் பார்த்தோம்; புதிய உடன்படிக்கையில் விசுவாசம் மற்றும் கிரியைகளின் பங்குபற்றி ரோமச் சபையாரும், குறிப்பாக அங்கிருந்த யூத விசுவாசிகளும் புரிந்துகொள்ளவேண்டுமென்று விரும்பினார். இரட்சிப்பு குறித்ததும், தேவனுக்குமுன் ஒரு பாவி எப்படி நீதிமானாகவும் பரிசுத்தவானாகவும் எண்ணப்படமுடியும் என்பதுபற்றியும் கேள்வி எழுந்திருந்தது. முற்றிலும் நியாயப்பிரமாணத்தை மட்டுமே வலியுறுத்தி வந்தவர்களிடம் எங்கு, எப்படி நியாயப்பிரமாணம் செயல்படுகிறது என்பதைத் தெளிவுப்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டு காலத்திலும் யூதமார்க்கம் கிருபையின் ஒரு மார்க்கமாகதான் இருந்தது; ஆனால், பின்னர் கிரியைத்துவம் தலைதூக்கி, அதிக பாதிப்பை உண்டாக்கியது. அதே தவற்றை நாமும் செய்யாதிருக்க, ஒரு சபையாக நாம் கவனத்துடன் இருக்கவேண்டும்.

***ரோமர் 13:11-14இல் எந்த நிகழ்வை பவுல் குறிப்பிடுகிறார்? அந்த நிகழ்வை எதிர்பார்த்தவர்களாக நாம் எவ்வாறு செயல்படவேண்டும்?***

'இயேசு மீண்டும் வருகிறார், எழுந்து அதற்காக ஆயத்தப்படுங்கள்' என்று விசுவாசிகளிடம் பவுல் கூறுகிறார். இது இரண்டாயிரம் வருடங்களுக்குமுன்னர் எழுதப்பட்டதாகவே இருக்கட்டும்! கிறிஸ்துவின் வருகை சமீபமாயிற்றென்கிற உணர்வோடுதான் நாம் வாழவேண்டும். நாம் மரிப்பது எவ்வளவு நிச்சயமோ அதேபோல இயேசு வரப்போவதும் நிச்சயம். அடுத்த வாரமோ, 40 வருடங்கள் கழித்தோ நாம் மரித்தால் என்ன, மரித்து நான்கு நாட்களோ 400 வருடங்களோ நித்திரைசெய்தால் என்ன, எல்லாம் ஒன்றுதான். அடுத்த கணம் நாம் சந்திப்பது இயேசுவின் இரண்டாம் வருகையாகத்தான் இருக்கும். யாருக்கும் எப்போது வேண்டுமானாலும் மரணம் நிகழலாம் என்பதால், நமக்குள்ள நேரம் குறைவு, நாம் நினைப்பதைவிட நம் இரட்சிப்பு சமீபமாயிருக்கிறது.

ரோமரில் இரண்டாம் வருகைகுறித்து பவுல் அதிகமாகப் பேசவில்லை; ஆனால், தெசலோனிக்கேயரிலும் கொரிந்தியரிலும் விலாவாரியாகப் பேசுகிறார். வேதாகமத்தில், அதுவும் புதிய ஏற்பாட்டில் இயேசுவின் இரண்டாம் வருகை ஒரு முக்கியக் கருத்தாகக் காணப்படுகிறது. இரண்டாம் வருகையும் அது தரும் நம்பிக்கையும் இல்லாமல் நம் விசுவாசம் உண்மையிலேயே அர்த்தமற்றதாக இருக்கும். 'விசுவாசத்தால் நீதிமானாகுதல்' எனும் அற்புத சத்தியமானது இரண்டாம் வருகையின்போதுதான் முழுமையடைகிறது; வருகை இல்லாவிட்டால் பயன் என்ன?

அடுத்த மாதத்தில் இயேசு கண்டிப்பாக வருவாரென உங்களுக்குத் தெரிந்திருந்தால், உங்கள் வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்களைச் செய்வீர்கள்? ஏன்? இயேசு வருவதற்கு ஒரு மாதத்திற்குமுன், இந்த மாற்றங்கள் அவசியமென்றால், ஏன் இப்போதே அவற்றைச் செய்யக்கூடாது? இப்போதே செய்தால் எவ்வளவு வித்தியாசமானதாக இருக்கும்?

## மேலும் படிக்க:

வெள்ளி
டிசம்பர் 22

“தேவனுடைய சித்தம் என்னவென்று வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மகா உன்னதமானவர் தேவவார்த்தையின் சத்தியங்களைச் சொல்லியிருக்கிறார். இந்தச் சத்தியங்களின்படி வாழ்கிறவன் எல்லா விதத்திலும் புதுசிருஷ்டியாயிருக்கிறான். புதிய மனத்திறன்கள் எதுவும் அவனுக்குக் கொடுக்கப்படுவதில்லை; மாறாக, பாவம் மற்றும் அறியாமையால் அவனுடைய புத்தியை அந்தகாரப்படுத்திய இருள் அகற்றப்படுகிறது. ‘உங்களுக்கு நலமான இருதயத்தைக் கொடுப்பேன்’ என்றால், ‘உங்களுக்கு புதிய சிந்தையைக் கொடுப்பேன்’ என்று அர்த்தமாகும். இருதயம் மாறியிருந்தால், கிறிஸ்தவக் கடமைகுறித்த தெளிவும், சத்தியம்பற்றிய அறிவும் கிடைத்திருக்கும். வேதவாக்கியங்களைக் கூர்ந்து, ஜெபத்தோடு ஆராய்கிறவன், தான் தேவனிடம் சென்றதால் அறிவுக்கூர்மையின் உச்சத்தை எட்டியதுபோல, தெளிந்த புத்தியையும், பகுத்தறிவையும் பெறுவான்.” – *EGW, ML, p 24.*

“கர்த்தர் சீக்கிரம் வருகிறார், அவருடைய வருகைக்காக ஆயத்தப்பட்டு, காத்திருக்கவேண்டும். அவரைப்பார்ப்பதும், மீட்கப்பட்ட அவருடையவர்களாக நாம் வரவேற்கப்படுவதும் எவ்வளவு மகிமையானது! நீண்டகாலம் நாம் காத்திருந்திருக்கலாம், ஆனால் நம் நம்பிக்கை மங்கக்கூடாது. ராஜாவை அவருடைய மகிமையில் நாம் காண முடிந்தால் என்றென்றும் பாக்கியவான்களாயிருப்போம். ‘வீடு செல்கிறோம்’ என்று சத்தமாகக் கத்தவேண்டும்போல் உள்ளது. மீட்கப்பட்டவர்களை அவர்களுடைய நித்திய வீட்டிற்கு அழைத்துச்செல்ல, கிறிஸ்து வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வரப்போகும் நாளைநெருங்கியிருக்கிறோம்.” – *8T, p 253.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. வியாழக்கிழமை கடைசிக் கேள்வியைப் பாருங்கள்; மக்கள் என்னென்ன பதில்களைக் கூறுகிறார்கள்? எவ்வாறு அவற்றை நியாயப்படுத்துகிறார்கள்?
2. நல்ல கிறிஸ்தவர்களாகவும், அதே சமயம் நல்ல குடிமக்களாகவும் இருப்பது சிலசமயங்களில் கடினம்தான். ‘தேவனுக்கு நான் உண்மையாக இருக்க வேண்டுமானால், அரசாங்க சட்டங்கள் சிலவற்றிற்கு நான் கீழ்ப்படியமுடியாது, என்ன செய்யலாம்?’ என்று ஆலோசனைகேட்கும் ஒருவருக்கு என்ன சொல்வீர்கள்? என்ன நியதிகளைப் பின்பற்றுவீர்கள்? ஜெபத்தோடும் நியாயத்தோடும் முடிவு எடுப்பது ஏன் அவசியம்? சிங்கக்கெபியில் எறியப்பட்டவர்களெல்லாம் உயிரோடு வந்ததாக சரித்திரம் இல்லை.
3. கட்டளைகளை எழுத்தின்படி கைக்கொள்வது கடினமா? தேவனையும் மற்றவர்களையும் நிபந்தனையின்றி நேசிப்பது கடினமா? அல்லது, கேள்வியே தவறென நினைக்கிறீர்களா? காரணம் கூறுங்கள்.
4. சீர்திருத்தம் ஏன் முக்கியமானதென ரோமர் புத்தகத்திலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்? நம் நம்பிக்கைபற்றியும், நம்பிக்கைக்கான காரணம்பற்றியும் ரோமர் சொல்வது என்ன?

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Hope TV India

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*